1992 மார்ச் 17]

243—

காலியாக உள்ள உதவிப் பேராசிரியர்கள் பதவிகளை நிரப்புதல்

*1399 டாக்டர் (திருமதி) சு. மணிமேகலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

அரசுக் கலைக்கல்லூரிகளில் காலியாக உள்ள உதவிப் பேராசிரியர் பதவிகளை நிரப்ப அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசுக் கலைக் கல்லூரிகளில் காலியாக உள்ள பணியிடங்களில் ஒப்பந்த அடிப்படையிலான விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வருகின்றனர். இனிமேல் முறையாக ஆசிரியர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் விரிவுரையாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

டாக்டர் (திருமதி) சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேர்வு முறை ஒப்பந்த அடிப்படையில் செய்யப்பட்டு பணிக்கு அமர்த்தப்படுவார்கள் என்று சொன்னார்கள். அப்படியானால் அசிஸ்டெண்ட் புரபசர்ஸ் தேர்வுக்கான ஸ்கிரீனிங் டெஸ்ட்டை முடித்து எவ்வளவு பேர்கள் பணிக்காக துறைவாரியாக—டிபார்ட்மெண்ட் வைஸ்—காத்து இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்த அடிப்படையிலான விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு இப்போது பணியாற்றி வருகின்றனர் என்றுதான் சொன்னேன். இனி மேலும் அப்படித்தான் செய்வோம் என்று நான் சொல்லவில்லை. இனிமேல் ஆசிரியர் தேர்வாணையம் மூலம் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதுவரையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணைக் குழுவின் ஆட்சி வரம்புக்கு உட்பட்டிருந்த இந்தத் தேர்வு தனியாக ஆசிரியர் தேர்வாணையம் என்று அமைக்கப்பட்டு அதன்மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒரு முறையை நாம் கொண்டு வந்திருக்கிறோம். இப்போது அதிலே பங்கு கொள்ள வேண்டிய ஆசிரியர்களுக்கு 'ஸ்கிரினிங் டெஸ்ட்' நடத்தி, நம்முடைய சென்னைப் பல்கலைக்கழகமே அதை நடத்தி, ஒரு பட்டியல் தயாரித்து இருக்கிறார்கள். அந்தத் தேர்வு ஆணையத்திற்கு கல்லூரிக் கல்வி இயக்குநர் அந்தஸ்தில் ஒரு உறுப்பினரை நாம் போடவேண்டும்.

அதை விரைவிலே நாம் போட இருக்கிறோம். அதைப் போட்ட வுடனே, ஆசிரியர்கள் தேர்வு ஆணையம் உதவிப் பேராசிரியர் களைத் தேர்ந்தெடுக்கும்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 244, திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

244—

வீரவநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் மருத்துவர் நியமித்தல்.

*3333 திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சேரன்மகாதேவி தொகுதி வீரவநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்பேறு விடுதி இருந்தும், பெண் மருத்துவர் நியமிக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பெண் மருத்துவர் நியமிக்கப் படுவார் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வீரவநல்லூர் ஆரம்ப சுகாதார நிலை யத்தில் பெண் மருத்துவர் ஒருவர் 2—11—1991 முதல் பணி யாற்றி வருகிறார்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் 11-வது மாதத்திலே பெண் மருத்துவர் ஒருவரை நியமித்ததாக சொன் னார்கள், நானும் அதை அறிந்தேன், ஆனால் அந்த மருத்து வர் வேலையில் ஜாயின் பண்ணிவிட்டு. ஒருசில நாட்கள் மட்டும் வேலை செய்துவிட்டு. மீண்டும் வரவில்லை, அவர், மாறு தலைத் தேடி, நாடி வந்து கொண்டு இருக்கிறார், இப்படி கிராமப்பகுதிகளிலே பெண் மருத்துவர்களை நியமிக்கின்ற போது, அவர்கள் அந்தப் பகுதிகளிலே வேலை செய்ய விரும்பு வதில்லை, தமிழகம் முழுவதும் உள்ள பெண்கள்—அதிலும்